**சுருக்கம்**

பணியமைப்பு – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – பொறியியல் பிரிவு – திரு.எம்.சிவக்குமார், உதவி செயற்பொறியாளர், திருச்சி மாவட்டம் – Ph.D., பயில்வதற்கு ஊதியமில்லா படிப்பு விடுப்பு (Study Leave without pay) மற்றும் அனுமதி வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ3) துறை**

அரசாணை (4ப) எண்.5 நாள் : 23.06.2014

**படிக்கப்பட்டவை**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதம் எண்.47792/2013/இஇ1, நாள் 7.8.2013 மற்றும் 23.10.2013.

----

**ஆணை**

மேலே படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தனது கடிதத்தில் திரு.எம்.சிவக்குமார், உதவி செயற்பொறியாளர், திருச்சி என்பவர் Ph.D., பயில்வதற்கு ஊதியமில்லா படிப்பு விடுப்பு (Study Leave without pay) மற்றும் அனுமதி அளிக்குமாறு விண்ணப்பித்துள்ளதாகவும், அதனை திருச்சி மாவட்ட ஆட்சியர் பரிந்துரை செய்து அனுப்பியுள்ளதாகவும், மேலும் தமிழ்நாடு படிப்பு விடுப்பு விதிகள், 1965ன்படி படிப்பு விடுப்பு வழங்கும் அதிகாரம் அரசுக்கு மட்டுமே உள்ளது என்றும், அப்படிப்பானது பொது நலனுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும் ("proposed course of study shall be of definite advantage from the point of view of public interest") என்று துறைத் தலைவர் சான்று வழங்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது என்றும், மேற்குறிப்பிட்ட விதிகளில், துணை விதி 5 விதி 3ன்படி படிப்பு விடுப்பு வழங்குவதற்கு திரு.எம்.சிவக்குமார் தகுதியுள்ளவராக உள்ளார் என்றும், அவர் உதவிப் பொறியாளராக 10.12.1998 அன்று பணியில் சேர்ந்துள்ளார் என்றும், அதன் பின்னர் பதவி உயர்வில் உதவி செயற்பொறியாளராக 10.08.2007ல் பணியில் சேர்ந்துள்ளார் என்றும், இவர் அரசுப் பணியில் 5 ஆண்டுகளுக்கு மேலாக பணிபுரிந்துள்ளார் என்றும், அவர் பி–பிரிவைச் சார்ந்த அலுவலர் என்றும், இவரது ஓய்வு பெறும் வயது 30.06.2025 என்பதால் இவருக்கு 3 ஆண்டுகளுக்கு மேல் அரசுப் பணியில் இருப்பார் என்றும், தனியர் மேல்கல்வி பயில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரால் மறுப்பின்மைச் சான்றும் அளித்து தனியர் Ph.D., பயில்வதற்கு விடுப்பு கோரியுள்ளார் என்றும் தெரிவித்து அடிப்படை விதிகள் 84ன்படி தனியருக்கு படிப்பு விடுப்பு வழங்கி ஆணையிட அரசைக் கோரியுள்ளார்.

2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடனும், சுயமாகவும் ஆய்வு செய்த பின்னர், தனியரின் Ph.D., படிப்பானது பொது நலனுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும் ("The proposed course of study of the individual shall be of definite advantage from the point of view of public interest") என்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் சான்று வழங்கியுள்ளதாலும், அடிப்படை விதி 84ல், துணை விதி 17ன்படி தனியர் பிணை உறுதிப்பத்திரம் அளித்துள்ளதாலும், மேலும், தனியர் படிப்பதற்கான செலவு அரசின் செலவினம் அல்லாமல் தனியரின் செலவினமே ஆகும் என்பதால் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, திரு.எம்.சிவக்குமார், உதவி செயற்பொறியாளர்,

திருச்சி என்பவர் Ph.D., பயில்வதற்கு தமிழ்நாடு படிப்பு விடுப்பு விதிகளில் விதி 5 (II)ன் கீழ் அவரது பணிக்காலம் முழுவதற்குமாக இரண்டு ஆண்டுகள் ஊதியமில்லா படிப்பு விடுப்பு வழங்கலாம் என இத்துறை உத்தேசித்து அவ்வாறே ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**நா.ச.பழனியப்பன்,**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
திரு.எம்.சிவக்குமார்,
உதவி செயற்பொறியாளர்,
திருச்சி.
(வழி – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15)
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15.
மாநில கணக்காயர், சென்னை–18.
மாவட்ட கருவூல அலுவலர், திருச்சி.
<u>நகல்</u>
மாண்புமிகு அமைச்சரின் (நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள்) சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்.**